Cambridge O Level

**Cambridge Assessment International Education**
Cambridge Ordinary Level

**TAMIL** **3226/02**

Paper 2 Translation and Reading Comprehension **May/June 2019**

**1 hour 30 minutes**

INSERT

*9016432343-I*

**READ THESE INSTRUCTIONS FIRST**

This Insert contains the reading passage for use with the Question Paper.

You may annotate this Insert and use the blank spaces for planning.
This Insert is **not** assessed by the Examiner.

This document consists of **3** printed pages and **1** blank page.

NL 167826/3
© UCLES 2019

Cambridge Assessment International Education

**[Turn over**

Read the following passage carefully and then answer, briefly and in **Tamil**, **Questions 3–11** on the Question Paper.

ஒரு தாய் தன்னுடைய வாழ்க்கை ஒழுங்காகப் போய்க் கொண்டு இருக்கிறது என்று நினைத்தாள். இப்பொழுது பெண் குழந்தைக்கு ஒரு வயது ஆகிறது. இரவில் பல மணித்தியாலங்களுக்குத் தூங்குகிறாள். தாய் சில மணி நேரங்களுக்கு பகுதி நேர வேலை செய்ய எடுத்துக் கொண்டாள். குழந்தை பிறப்பதற்கு முன்னால் ஒரு நிறுவனம், பத்திரங்கள் சரியாக இருக்கிறதா என்று பார்க்கும் வேலையை வீட்டிற்கு ஈ மெயில் மூலமாக அனுப்பினார்கள். பத்திரங்கள் ஒவ்வொன்றையும் சரியாக இருக்கிறதா என்று பார்த்து அடுக்கி வைத்து திரும்பவும் ஈ மெயிலில் அனுப்புவாள். இப்பொழுது குழந்தை கொஞ்சம் வளர்ந்த படியால், திரும்பவும் வீட்டிலிருந்து தன்னுடைய கணணியில் வேலை செய்ய ஆரம்பித்தாள்.

அவள் கீழே இருந்த அறையில் இருந்து கொண்டு வேலை செய்தாள். அந்த அறையிலிருந்து மாடிக்குப் போவதற்கும் படிகள் இருந்தன. அந்தத் தாய். குழந்தை மாடிப்படியின் அருகில் போவதைக் கவனித்தாள். பிறகு முதல் படியைப் பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள். குழந்தை மாடிப்படியில் ஏற ஆரம்பித்தால், தாய்க்கு வேலை செய்வது கஷ்டம் என்று தெரியும். முதலில் தாய் இரண்டாவது படியில் சில தலையைணகளைப் போட்டாள். சில நாட்கள் ஒரு முழங்காலைமுதல் படியில் மடித்துக்கொண்டு நின்றாள். சீக்கிரத்தில் தலையணைகளை ஒரு பக்கம் தள்ளிவிட்டு, ஒரு கையால் இரண்டாவது படியைத் தொட்டாள். தாய் தன் திட்டத்தை மாற்றி, இரண்டு பைகள் நிறைய மளிகை சாமான்களை வாங்கிக் கொண்டு வந்து இரண்டாவது படியில் வைத்தாள். குழந்தைக்கு பை மிகவும் கனமாக இருந்த படியால், அதைத் தள்ள முடியவில்லை. கொஞ்ச நாட்களுக்குத் தாயால் தன் வேலையைச் செய்ய முடிந்தது. வாரக் கடைசியில் தாய் வேலை செய்து கொண்டிருக்கும் போது, குழந்தையின் சத்தமே கேட்கவில்லை என்று திரும்பிப் பார்த்தாள். ஒரு பையில் மா இருந்தது. அதைத் திறந்து தன் உடம்பு தலையெல்லாம் போட்டுக் கொண்டிருந்தாள். ஒரு பை திறந்த படியால் இரண்டாவது பையையும் திறந்து தானியங்களையும் எடுத்தாள்.

தாய் இன்னொரு திட்டம் போட வேண்டும் என்று நினைத்தாள். ஏனென்றால் குழந்தை நல்ல பலத்துடனும் புத்திக் கூர்மையுடனும் இருந்தாள். வாரக் கடைசியில், தாய் தன் குழந்தையை மாடிப்படியில் ஏறச் சொல்லிவிட்டு, விழுந்தால் பிடிப்பதற்கு கீழே நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். இப்பொழுது குழந்தை நாலைந்து படிகள் ஏறுகிறாள். சில சமயங்களில் மேலே போய் நின்று திரும்பிப் பார்க்கிறாள். கீழே விழுவதைப் பற்றி கவலைப் படவில்லை. சில சமயம் கொஞ்சம் அழுவாள். ஆனால் திரும்பவும் படிகளில் ஏறத் தொடங்குவாள். அம்மா என்ன செய்வது என்று திகைத்தாள்.

அடுத்த கிழமை தினமும் வேலையை முடித்துக் கொடுக்க வேண்டியிருந்தது. மாடிப்படியை மூடி வைத்தால் குழந்தை கத்துவாள் என்று தெரியும். பல தலையணைகளைக் கொண்டு வந்தாள். மேலே மாடிப்படிகளில் போடுவதற்கு பதிலாக படிகளின் கீழே போட்டாள். அவள் தன்னுடைய வேலை செய்யும் இடத்தையும் உட்காரும் இடத்தையும் குழந்தையையும் மாடிப்படியையும் பார்க்கிற மாதிரி போட்டுக் கொண்டாள். முதல் நாள் அம்மா வேலை செய்வதைப் பார்த்து விட்டு மேலே ஏறிப் போனாள். ஒரு பக்கம் திரும்பி அம்மாவைப் பார்க்கும் போது அவள் தடுக்கிக் கீழே இருக்கும் தலையணையில் விழுந்து விட்டாள். அவள் சிரித்து விட்டு திரும்பவும் மாடியில் ஏறப் போனாள். தாய் தனக்குள்ளே சிரித்துக் கொண்டு தன்னுடைய வேலையை முடிப்பதில் கவனமாக இருந்தாள்.

BLANK PAGE

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which itself is a department of the University of Cambridge.